தரம் **08**

## பாடசாலை மட்ட இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023 (2024)

## வரலாறு

புள்ளிகள்

சுட்டெண்:

நேரம் : 02.00 மணித்தியாலம்

### பகுதி - I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

**01)** அனுராதபுர இராச்சியத்தின் முதல் மன்னனான பண்டுகாபயனால் அமைக்கப்பட்ட வாவிகளுள் உள்ளடங்காதது,

1. அபயவாவி  2. ஜயவாவி  3. திஸவாவி  4. காமினிவாவி

**02)** இராசரட்டை நாகரிக வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணி,

1. பாண்டியரின் ஆக்கிரமிப்பு  2. சோழ மன்னனின் படையெடுப்பு
3. எல்லாள மன்னனின் கைப்பற்றல்  4. கலிங்கமாகனின் படையெடுப்பு

**03)** உலர் வலய நீர்ப்பாசன தேவையை ஏற்படுத்தியிருக்க முடியாத காரணி,

1. ஈரவலய நீரினை பெற்றுக் கொள்ள முடிந்தமை
2. உலர் வலய மழைவீழ்ச்சி குறைவாகக் கிடைத்தமை
3. கிடைக்கப்பெற்ற மழைவீழச்சி பயிர்செய்கைக்குப் போதாமை
4. ஒரு பருவத்தில் மாத்திரமே உலர்வலயம் நீர் பெற்றமை.

**04)** அநுராபுரக் கால சந்திரவட்டக்கல்லின் மத்தியில் உள்ள மலர்,

1. செவ்வந்தி  2. மல்லிகை  3. தாமரை  4. அல்லி

**05)** இளவரசன் விஜயனின் வருகைக்குப் பின்னரான சிறு குள அமைப்பினுள் உள்ளடங்காதது,

1. அபயவாவி  2. கலாவாவி  3. திஸ்ஸ வாவி  4. காமினி வாவி

- a. பாரிய நீர்ப்பாசன முறையை நாட்டில் அறிமுகஞ்செய்தமை.
  b. ஜயகங்கை கால்வாயை அமைத்தமை
  c. ஜேதவனராமய விகாரையை அமைத்து பௌத்த மக்களின் வழிபாட்டிற்கு உதவியமை

**06)** மேலுள்ள கூற்றுக்களோடு தொடர்புடைய மன்னர்கள் முறையே

1. வசபன், மகாசேனன், தாதுசேனன்  2. தாதுசேனன், வசபன், மகாசேனன்
3. வசபன், தாதுசேனன், மகாசேனன்  4. 1ம் அக்கபோ, வசபன், மகாசேனன்.

**07.** கீழே தரப்பட்ட கூற்றுக்களோடு தொடர்புடைய நபர்,

a. போர்த்துக்கல்லில் முடி சூட்டு விழா நடத்தப்பட்டமை
b. தொன் ஜுவான் என கத்தோலிக்க நாமம் சூடியமை
c. வீதிய பண்டாரனின் புதல்வனாக காணப்பட்டமை.

1. ஜோதிய  2. தர்மபாலன்  3. 7ம் புவனேகபாகு  4. மாயாதுன்ன

08) கீழைத்தேசத்தில் போர்த்துக்கேயர் படு தோல்வியடைந்த போரானது,

1. பலன    2. முல்லேரியா    2. தந்துரே    4. கண்னொறுவ

09) A பகுதியில் தரப்பட்டுள்ள மன்னர்களுடன் தொடர்புடைய விடயங்கள் B பகுதியில் தரப்பட்டுள்ளன. அவற்றை தொடர்புபடுத்தினால் வரும் விடை

| "A" | "B" |
| --- | --- |
| 1. 1ம் விமலதர்ம சூரியன் | A. இலங்கையின் இறுதி சிங்கள மன்னன் |
| 2. 2ம் இராஜசிங்கன் | B. ஒல்லாந்தரோடு உடன்படிக்கை செய்தவன் |
| 3. 2ம் விமலதர்மசூரியன் | C. கண்டி, தலதா மாளிகையை மும்மாடி கொண்டதாக அமைத்தவன் |
| 4. ஸ்ரீ விக்கிரம நரேந்திர சிங்கன் | D. சீதாவக்கை ஆதிக்கத்திலிருந்து கண்டியைக் காப்பற்றியவன். |

1. DBAC    2. CBDA    3. DBCA    4. CBAD

10) விஜயபாகு கொள்ளை இடம் பெற்ற ஆண்டு?

1. கி.பி 1521    2. கி.பி 1580    3. கி.பி 1551    4. கி.பி 1697

(10x2=20 புள்ளிகள்)

○ **11 - 15 வரையான கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.**

11) 15ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் ஐரோப்பாக்கண்டத்திற்கு வெளியே உள்ள நாடுகளை கண்டறிவதில் ஐரோப்பியர் அக்கறை காட்டினர். ( )

12) ஜொஹன்ஸ் கூட்டன் பேர்க்கினால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரம் அறிவுத்துறையில் புரட்சியை உண்டு பண்ணியது. ( )

13) கண்டியிராச்சியத்தை அதிக காலம் ஆட்சி செய்த மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆவான். ( )

14) பொலநறுவைக்கால சந்திரவட்டக்கல்லில் எருதின் உருவம் நீக்கப்பட்டது. ( )

15) சிகிரிய ஓவியங்களில் வெண்மை, பச்சை, கபிலம் போன்ற நிறங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. ( )

(5x2=10 புள்ளிகள்)

○ **16 - 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடைகளைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

16) கண்ணுசாமி இளவரசனை மன்னனாக்க ............................................ எனும் பிரதானி உதவினான்.

17) கொன்ஸ்தாந்துநோபிள் ............................................ ஆண்டில் துருக்கியரால் கைப்பற்றப்பட்டது.

18) கண்டியிராச்சிய காலத்தில் ............................................ பிரதேசம் இரும்புக் கைத்தொழிலுக்குப் பிரசித்தி பெற்றது.

19) கலா ஓயாவை மறித்து அணை கட்டியதால் ............................................ வாவி உருவாக்கப்பட்டது.

20) முதன் முதலில் ஆசிய நாட்டுக்குள் பிரவேசித்த இனம் ............................................ ஆகும்.

| எஹலபொல, பிலிமத்தலாவ, கலா, குருளு, 1453, 1573, ஒல்லாந்தர், ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், கொத்மலை, கிரிவவுல |
| --- |

(5x2=10 புள்ளிகள்)

## பகுதி - II

❍ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01)** அ)



i. அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

.............................................................................................

ii. இவரால் உறுதி செய்யப்பட்ட அம்சம் எது.

.............................................................................................

iii. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்.

.............................................................................................

iv. இவர் எந்த ஆண்டில் தனது பிரயாணத்தை ஆரம்பித்தார்.

.............................................................................................

(4x1=4 புள்ளி)

ஆ) i. கீழே தரப்பட்டுள்ள A,B,C,D ஆகிய கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.

a. கலா வாவியில் இருந்து திஸவாவிக்கு நீரைக் கொண்டு செல்லும் கால்வாய்.

.............................................................................................

b. அனுராதபுர நகருக்கு வெளியே கட்டப்பட்டிருந்த பாரிய தாதுகோபங்களுள் ஒன்று.

.............................................................................................

c. போர்த்துக்கேயர் கோட்டையிராச்சியத்தை பொறுப்பேற்கு முன் மேற்கொண்ட உடன்படிக்கை.

.............................................................................................

d. 2024ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் மிகப்பிரமாண்டமான குளங்களுள் ஒன்றான சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டத்தை பாதுகாக்க மனித முயற்களில்லாமல் பயன்படுத்தப்பட்ட குள உறுப்பு.

.............................................................................................

(4x1=4 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் A-J வரையான எழுத்துக்கள் சில இடங்களை குறித்துக்காட்டுகின்றன, பின்வரும் இடங்களை இனங்காட்டும் சரியான ஆங்கில எழுத்தினை அடைப்புக்குள் எழுதுக.

1. பராக்கிரம சமுத்திரம் (............)
2. மன்னார் (............)
3. திருகோணமலை (............)
4. களுத்துறை (............)
5. சீதாவக்கை (............)
6. கோட்டை (............)




(1x6=6 புள்ளிகள்)

iii. கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் M-U வரையான எழுத்துக்களால் சில இடங்கள் காட்டப்பட்டுள்ளன. பின்வரும் இடங்களை இனங்காட்டும் சரியான ஆங்கில எழுத்தினை அடைப்புக்குறிக்குள் எழுதுக.




1. ஜப்பான் (............) 2. இத்தாலி (............)
3. நெதர்லாந்து (............) 4. பிரித்தானியா (............)
5. போர்த்துக்கல் (............) 6. நன்னம்பிக்கைமுனை (............)

(1x6=6 புள்ளிகள்)

02) i) புராதன இலங்கையில் பின்வரும் முறைகளில் இரும்பு உருக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்த இடங்களைப் பெயரிடுக.

a. மலையுச்சியில் இயற்கை காற்று மூலம் ..............................

b. ஊதுளைக்கருவி மூலம் ..............................

ii) உலர் வலயங்களில் நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

..............................

..............................

iii) கி.பி 1815ல் கண்டியிராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டமைக்கு சாதகமாக அமைந்த காரணிகள் மூன்று தருக.

..............................

..............................

..............................

iv) கால்வய்களை நிர்மாணிக்கும் போது எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் இரண்டு தருக.

..............................

..............................

(2+2+3+3=10 புள்ளிகள்)

03. i) மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் துறைகளுக்கு பங்காற்றியவர்கள் பெயரை ஒன்று வீதம் எதிரே எழுதுக.

a. சிற்பக்கலை ..............................

b. கல்வி இலக்கியம் ..............................

ii) கண்டி இராச்சியக்கால பொருளாதார நடவடிக்கைகள் இரண்டு தருக.

..............................

..............................

iii) ஐரோப்பிய மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்று தருக.

..............................

..............................

..............................

iv) ஐரோப்பாவில் மத்திய காலப்பகுதியில் காணப்பட்ட கலைப்பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

..............................

..............................

..............................

(2+2+3+3=10 புள்ளிகள்)

04. i) நாடு காண் பயணங்கள் மூலம் பின்வரும் பிரதேசங்களுக்கு போக்குவரத்துப் பாதைகளை கண்டறிந்த நபர்களைப் பெயரிடுக.

a. கரிபியன் தீவு ................................., .................................................................

b. ஆறு ................................., .................................................................

ii) பிரான்சியர் இந்தியாவில் வர்த்த களஞ்சிய சாலையை நிறுவிய இரண்டு இடங்களைப் பெயரிடுக.

................................................................. .................................................................

iii) ஐரோப்பியர் ஆசியாவுக்கு வர வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்திய மூன்று காரணிகள் தருக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

iv) நாடுகாண் பயணத்திற்கான பின்னணிக் காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(2+2+3+3=10 புள்ளிகள்)

05) i) போர்த்துக்கேயர் கண்டி மன்னர்களுடன் மேற்கொண்ட பின்வரும் போர்களின் போது தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதிகளின் பெயர்களை முறையே பெயரிடுக.

a. ரந்தெனிவெல ................................., .................................................................

b. பலன ................................., .................................................................

ii) சீதவக்கை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் இரண்டை எழுதுக.

.................................................................................................................................

.................................................................................................................................

iii) போர்த்துக்கேயர் கோட்டை இராச்சிய அரசியலில் தலையீடு செய்தமைக்கு துணைபுரிந்த இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

iv) போர்த்துக்கேயரின் கரையோர ஆட்சியின் விளைவால் இலங்கையின் பண்பாட்டோடு கலந்த விடயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(2+2+3+3=10 புள்ளிகள்)